[1980 பிப்ரவரி 2

2. வினாக்கள்-விடைகள்.

அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம்.

*வினா எண் 1—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பூம்புகார் நகரில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) ஆம்.

(ஆ) வேதாரண்யத்திலிருந்து கொள்ளிடம் சங்கமமாகும் இடத்திற்கு இடையே உள்ள கிழக்குக் கடற்கரைப் பகுதியில், இப்பொழுது கடலரிப்பு அபாயம் ஒன்றும் இல்லை. இருப்பினும், புயல் காலத்தில் பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள இலஞ்சி மண்டபம் அபாயத்துக்கு உட்படலாம். அம் மண்டபத்தின் கிழக்கேயுள்ள மண் கரை கடந்தகால புயலைச் சமாளித்து நின்றது. ஆகையால், அம்மண் கரையை இப்பொழுது சிமெண்ட் கான்கிரீட்டால் பலப்படுத்தினால் போதும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். கணேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதே பிரச்சினை குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அதற்காக ரூ. 7 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்தார்கள். அப்படி குறிப்பிட்ட அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதா? இது வரையில் வேலை துவக்கப்படவில்லையே, எப்போது வேலை துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் செயலர் அவர்கள் அறிவிப்பார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குறிப்பு என்னிடத்தில் இல்லை. கடந்த 10 ஆண்டுகளாகப் புயல் காலத்தில் ஏற்படும் அலைகளால் நிலப் பகுதியை நோக்கி கடலரிப்பு ஒன்றும் இல்லை என்று தெரிகிறது. இப்போது கடலரிப்பு அபாயம் ஒன்றும் இல்லை என்று தான் குறிப்பேட்டில் இருக்கிறது.

1980 பிப்ரவரி 2]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் தற்போது கடலரிப்பு ஏற்படும் அபாயம் ஒன்றும் இல்லை என்று தெரிவித்தார்கள். கடல் அரித்துக் கொண்டு இருக்கிறது. அதைக் கண்கூடாகக் காண அவர் முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் உடனடியாக அவர் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது அறிவிக்கப் பட்ட திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா? அப்படி செயல்படுத்தாவிட்டால் அந்தப் பகுதியில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு, அங்கே எதற்காக பூம்புகார் என்கிற புதிய நகரம் உருவாக்கப்பட்டதோ அதுவே அழிந்துவிடும் என்ற நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதை உணர்ந்து, உடனடியாக அதைக் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, நிலப் பகுதியை நோக்கி கடலரிப்பு ஒன்றும் இல்லை என்று தெரிகிறது. ஆனால், இலஞ்சி மண்டபம் அலைகளால் பாதிக்கப்படும் இடத்தின் அருகாமையில் இருக்கிறது. கடந்த புயலின்போது, இலஞ்சி மண்டபத்திற்குக் கிழக்கே அமைந்துள்ள மண் வளைவு, கடல் நீர் உள்ளே புகாமல் தக்கபடி தடுத்தது. இது இப்பொழுது வலுவாக்கப்படுவதுடன், கான்கீரிட் பலகைகளால் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதற்காக புதிய மதிப்பீடு ஒன்றை அரசு தயாரிக்கும்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் நகரில் உள்ள கண்ணகி சிலை கடல் அரிப்பால் சேதம் ஆவதற்கான அபாயம் இருக்கிறது. எனவே, அந்தக் கண்ணகி சிலையைப் பாதுகாப்பதற்கு அரசு தக்க கவனம் செலுத்துமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகி சிலையைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. கண்ணகி சிலையைக் கடலுக்கு அருகாமையில் இருந்து தள்ளி வைக்க வேண்டும் என்பதற்கும் அரசு மதிப்பீடு தயாரித்து வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட பெரும் மழையின் காரணமாகவும், புயலின் காரணமாகவும் கடல் அரிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறதுச் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வெள்ள நிவாரண வேலையாக செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து கடல் அரிப்பு பாதுகாப்புக்குத் தேவையான பண உதவி கோரப்பட்டதா? எவ்வளவு நிதி தமிழக அரசுக்கு வழங்கப்பட்டது?

[1980 பிப்ரவரி 2

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே. பூம்புகார் நகரில் ஆண்டுதோறும் இந்திர விழா கொண்டாட இந்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அத்தகைய திட்டம் இப்போது இல்லை.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் பூம்புகார் நகரத்திற்கு வந்து தங்கியிருக்கிறார்கள். அவர்கள் அப்போது பூம்புகார் நகரை சுற்றிப் பார்த்திருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல, அங்கே இருக்கிற மீனவர் பகுதியில் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் கடலரிப்பால் விரைவில் பாதிக்கப்பட இருப்பதால், உடனடியாக அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, நான் பூம்புகாருக்குச் சென்றது கடல் அரிப்பைப் பார்வையிட அல்ல; பூம்புகார் கல்லூரி விழாவில் கலந்துகொள்ள.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நிதியமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்கள் பூம்புகாரை காணத் தான் சென்றேன். கடல் அரிப்பை காணச் செல்லவில்லை என்று சொன்னார்கள். கடலோரப் பகுதியில்தான் புதிய பூம்புகார் நகரம் இருக்கிறது. எனவே, நிச்சயமாக கடல் அரிப்புப் பகுதியைப் பார்த்திருப்பார்கள். இல்லை என்றால் இனியாவது அதைக் காண்பதற்காகச் சென்று, ஆவன செய்ய முன்வருவாரா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, பூம்புகார் கடற்கரை ஓரத்தில் தென்றல் காற்றின் சுகத்தை அனுபவிக்க நான் செல்லவில்லை; வருங்கால இளைஞர் சமுதாயத்தை வாழ வைக்கும் பணியில், அந்த மாணவர் சமுதாயத்திற்கு என்னென்ன பணியாற்ற வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக கல்லூரி விழாவில் கலந்து கொள்ளத்தான் சென்றேன்.